# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 13.07.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 5722/SCIC/2024**

திரு ந. சுந்தரமூர்த்தி ... புகார்தாரர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையர் (தலைமையிடம்), ....... பொதுஅதிகார அமைப்பு
காவல் ஆணையர் அலுவலகம்,
மதுரை 625 002

**ஆணை**

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **04.10.2024** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 04.11.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 22.11.2024 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், காவல் உதவி ஆணையர் அலுவலகம், திடீர் நகர் சரகம், மதுரை மாநகர், மதுரை என்ற முகவரிக்கு அனுப்பிய சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 04.10.2024 தேதியிட்ட மனுவில் திடீர் நகர் சரக காவல் உதவி ஆணையர் தன்னை எந்த புகார் மனுவின் அடிப்படையில் விசாரணை செய்தார், எதிர் மனுதாரரை எந்த அலுவலகத்தில் வைத்து விசாரணை செய்தார் என்பது போன்ற தகவல்களை 8 இனங்களில் வழங்குமாறும் கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பில், திரு P. அசோகன், காவல் உதவி ஆணையர், மதுரை மாநகர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர், மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு, 04.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக இனவாரியாக தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரால் தனக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் தங்கள் அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்களில் இனங்கள் 2 மற்றும் 7க்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இனம் 2க்கு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர்களிடம் திடீர் நகர் காவல் உதவி ஆணையர் அலுவலகத்தில் வைத்து விசாரணை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது தவறான மற்றும் உண்மையற்ற தகவல் என்று மனுதாரர் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், மேற்குறிப்பிட்ட தனது கோரிக்கை குறித்து மதுரை நகர காவல் ஆணையருக்கு புகார் மனு அளித்துள்ளதாகவும் மனுதாரர் தெரிவித்தார்.

4. ஆவணங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆணையத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், மனுதாரர் தனக்கு வழங்கப்பட்ட தகவல்களில் உள்ள குறைபாடுகள் குறித்து காவல் துறையின் உயர் அதிகாரி அதாவது மதுரை மாநகர காவல் ஆணையருக்கு தனியாக மனு செய்வதன் மூலம் சட்டவிதிகளின் படி நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக அமையும் என்பதை ஆணையம் மனுதாரருக்கு எடுத்துரைக்கிறது. **இத்துடன் இந்த புகார் மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 5722/SCIC/2024</u>**

**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்,
காவல் துணை ஆணையர் (தலைமையிடம்),
காவல் ஆணையர் அலுவலகம்,
மதுரை 625 002

**மனுதாரர்**
திரு ந. சுந்தரமூர்த்தி,
3-1/151, பாப்பம்மாள்புரம்,
ஆண்டிபட்டி,
தேனி 625 512

TK/PS